91-ஆம் ஆண்டு பிறந்தநாளை முன்னிட்டு - பாவலரேறு

# பெருஞ்சித்திரனார் எழுத்தடைவுகள் 16 தொகுப்பு நூல்கள் முன் வெளியீட்டு திட்ட அறிவிப்பு!

## தொல். திருமாவளவன் எம்.பி. - பொழிலன் - தமிழ்கேள்வி செந்தில்வேல் - வாலாசா வல்லவன் கருத்துரை!



சென்னை, மார்ச் 6-

தமிழறிஞர் பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களின் 91-ஆம் ஆண்டு பிறந்த நாள் நிகழ்வில், பாவலரேறு பெருஞ்சித்திரனாரின் எழுத்தடைவுகள் 16 தொகுப்பு நூல்கள் சென்னை பாவலரேறு தமிழ்க் களத்தில் 9.3.2024 அன்று முன்வெளியீட்டுத் திட்ட கருத்துரை நிகழ்ச்சி நடைபெறுகிறது.

இந்நிகழ்வு முனைவர் மா.பூங்குன்றன் தலைமையில் தமிழ்த்திரு மா.பிறைநுதல் வரவேற்புரையில், இறை. பொற்கொடி, முனைவர் கி.குணத்தொகை ஆகியோர் முன்னிலையில் நடைபெறுகிறது.

எழுத்தடைவுகள் குறித்து பெருஞ்சித்திரனாரின் புதல்வர் தோழர் பொழிலன் (தமிழக மக்கள் முன்னணி) விளக்கவுரையாற்றுகிறார்.

இந்நிகழ்வில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல். திருமாவளவன் எம்.பி., சொல்லாய்வு அறிஞர் அருளியார், ம.தி.மு.க. துணைப் பொதுச் செயலாளர் மல்லை சத்யா, தமிழ் கேள்வி ஊடகம் செந்தில்வேல், தமிழ்மண் தன்னுரிமை இயக்கப் பேராசிரியர் த.செயராமன், மார்க்சிய பெரியாரிய பொதுவுடைமைக் கட்சி - வாலாசா வல்லவன் ஆகியோர் கருத்துரை ஆற்றுகின்றனர்.

மேலும் இந்நிகழ்வில் தமிழறிஞர்கள் பலர் பங்கேற்கின்றனர்.

வரும் சூன் மாதம் பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களின் 29-ஆம் ஆண்டு நிறைவு நினைவேந்தல் நாளில் நடக்க இருக்கும் நூல்கள் வெளியீட்டுக்குரிய முன் வெளியீட்டுத் திட்ட அறிவிப்பு குறித்த இக்கருத்துரை நிகழ்ச்சியை பாவலரேறு தமிழ்க்களம் ஒருங்கிணைத்திருக்கிறது.

நிகழ்வின் நிறைவில் தமிழ்த்திரு அரசி நன்றி கூறுகிறார்.

அமைச்சர்கள் பி.கே.சேகர்பாபு - ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் வழங்கினர்! சென்னை கிழக்கு

# மாவட்ட தொழிலாளர் அணி சார்பில் 500 சுமை தூக்கும் தொழிலாளர்களுக்கு நல உதவிகள்!

## எல்.சம்பத்குமார் தலைமை! எஸ்.முரளி - ராஜசேகர் பங்கேற்பு!

சென்னை, மார்ச். 6

சென்னை கிழக்கு மாவட்ட தொழிலாளர் அணி சார்பில் கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு 500 சுமை தூக்கும் தொழிலாளர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா (3.3.2024 ஞாயிற்றுக்கிழமை) காலை 10 மணிக்கு, தாதா முத்தியப்பன் தெரு, ஆச்சாரப்பன் தெரு சந்திப்பு, கொத்தவால் சாவடியில் நடைபெற்றது.

சென்னை கிழக்கு மாவட்ட தொழிலாளர் அணி மாவட்ட அமைப்பாளர் எல்.சம்பத்குமார் தலைமை வகித்தார்..

இதில் பகுதிச் செயலாளர்கள் எஸ்.முரளி, எஸ்.ராஜசேகர், எம்.விஜயகுமார், ஜி.எம்.தேவன், பி.ஸ்ரீராமுலு, ஆர்.வரதன், எம்.ஷேக் அப்துல்லா, ஆர். கலைச்செல்வி எம்.இப்ராஹிம் கனி, ராஜேஷ் ஜெயின், பி.விஜயகுமார், எம்.விநாயகம், பா.பிரதீப் குமார், பா.ஜெகதீஷ் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

ஆ.சு.அசோக்குமார், ஸ்டன்ட் புஷ்பா ஆர்.ஆறுமுகம், வி.ராஜமாணிக்கம் ச.ஜெயக்குமார், கே. ரமேஷ், மா.முத்து, வே. ராமு, எஸ்.ரமேஷ்பாபு கே. பிரகாசம், துரை கணேஷ், ஏ.என்.ஆர்.செந்தில்குமார், எஸ்.ஜெகன், அ.ஆதம் கிறிஸ்வர் பாரி, கொளத்தூர் கே.கங்காசரன் ஆகியோர் வரவேற்றனர்.

இந்நிகழ்ச்சியில் உயர் கல்வித் துறைஅமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு ஆகியோர் 500 சுமை தூக்கும் தொழிலாளர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கி சிறப்புரையாற்றினர்.

இந்நிகழ்ச்சியில் மேயர் பிரியா ராஜன், துறைமுகம் தொகுதி தேர்தல் பார்வையாளர் க.பிரபு, கோ.ஏகப்பன், இசட் ஆசாத், தேவஜவகர், புனிதவதி எத்திராசன் மற்றும் மாவட்ட பகுதி வட்டக் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்

57 (அ) வட்டக் கழகச் செயலாளர் பா.அண்ணாதுரை, 57 வது வட்டக் கழகச் செயலாளர் ஜி.ராமமூர்த்தி ஆகியோர் நன்றி கூறினர்.

பொ.த.மதிவாணன் தலைமை! எம்.சுப்பிரமணி, சி.பி.கார்த்திக் முன்னிலை!

# 177 வது வட்டத்தில் கழகக் கொடி ஏற்றி அறுசுவை உணவு வழங்கல்!

## அசன் மௌலானா எம்.எல்.ஏ. - அரிமா சு.சேகர் பங்கேற்பு !

சென்னை மார்ச்: 6

வேளச்சேரி மேற்கு பகுதி 177 வது வட்டத்தில் 1000 பேருக்கு அறுசுவை உணவு வழங்கும் விழா திராவிட மாடல் நாயகரின் 71.வது பிறந்த நாள் விழாவை முன்னிட்டு 177. வது வட்ட தி.மு.கழக சார்பு மன்றமான உதய சூரியன் நற்பணி மன்றம் சார்பில் டி.ஏ. கோவில் முதல் தெருவில் உள்ள அரசு மேல்நிலைப் பள்ளி அருகில் வட்ட கழக செயலாளர் பொ.த.மதிவாணன் தலைமையில் எம்.சுப்பிரமணி (மன்ற செயலாளர்) சி.பி. கார்த்திக் (பகுதி கழக பிரதிநிதி) ஆகியோர் முன்னிலையில் வேளச்சேரி சட்டமன்ற உறுப்பினர் அசன் மௌலானா கலந்து கொண்டு பொது மக்களுக்கு அறுசுவை உணவு வழங்கி உரையாற்றினார்.

விழாவின் துவக்கமாக பகுதிசெயலாளர் அரிமா. சு.சேகர் உதயசூரியன் நற்பணி மன்றத்தின் பெயர் பலகையை திறந்து வைத்து கழக கொடியேற்றி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் பகுதி நிர்வாகிகள் பொ.த.எழில்வாணன், வி.ஜி.மோகன், வட்ட கழக நிர்வாகிகள் மு.ஜெயசந்திரன், வி.கணேஷ் குமார், ர.ரமேஷ், நவபாரதி எத்திராஜ், எஸ்.புகழேந்தி செல்வன், டி.சதீஷ், சி.சிவசாமி, கடப்பா ராஜா, எல். மலரவன், கே.புண்ணிய கோட்டி, இ.எத்திராஜ், சி.முத்துகிருஷ்ணன், ஆர். குணசேகரன், ஆர்.தட்சிணாமூர்த்தி, கே.மோகன், பிரேம்குமார், பரசுராமன், (ஜெகநாதபுரம்) நடராஜன், குணசேகரன், தயாளன், சுப்பிரமணி, பி.மோகன், வி.பழனி, சுசீலா சரவணன், பன்னீர்செல்வம், சிவா, சந்திரசேகர், கன்னியப்பன், ஹரி பாலாஜி, கௌதமன், மற்றும் உதயசூரியன்,

நற்பணி மன்ற நிர்வாகிகள் புண்ணியகோட்டி, எம். சுப்பிரமணி, கஜேந்திரன், தீனதயாளன், சரத்குமார், பிரபு, ராஜலிங்கம், சதீஷ், மன்ற காப்பாளர்கள். லட்சுமி காந்தன், கார்த்திக் மன்ற ஆலோசகர்கள் செயற்குழு உறுப்பினர்கள் கார்த்திகேயன், சதீஷ், வனலிங்கம், தீபக், சம்பத், ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

மும்பை புறநகர் மாநில தி.மு.க. நடத்திய

# கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாள் விழா!

## அலிசேக் மீரான் சிறப்புரை! பி.கிருஷ்ணன் தலைமை!

மும்பை, மார்ச் 6-

திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்த நாள் விழா மும்பை திலக் நகர் செம்பூரில் உள்ள தருண்பாரத் சேவா சங்க அரங்கில் வைத்து நடைபெற்றது.

மும்பை புறநகர் மாநிலத் தி.மு.கழகத்தின் பொருளாளர் பி.கிருஷ்ணன் தலைமையில் நடைபெற்ற விழாவில் துணைச்செயலாளர் அ.இளங்கோ வரவேற்புரை ஆற்றினார்.

மும்பை புறநகர் மாநிலத் தி.மு.க. செயலாளர் அலிசேக் மீரான் விழாவில் எண்ணற்ற பெண்களுக்கு நலஉதவிகள் வழங்கிச் சிறப்புரை ஆற்றினார்.

நூற்றுக்கும் மேற்பட்ட பள்ளி மாணவ-மாணவிகளுக்கு குறிப்பேடுகள், எழுது கோல்கள், வடிவியல் பெட்டிகளும் (Geometry boxes) வழங்கிச் சிறப்பித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

புறநகர் தி.மு.க. துணைச் செயலாளர் முனைவர் வதிலை பிரதாபன் திராவிட கழகத் தலைவர் பெ. கணேசன், மாநில இளைஞரணி அமைப்பாளர் ந.வசந்தகுமார், பகுத்தறிவாளர் கழகத் தலைவர் அ.இரவிச்சந்திரன், இலக்கிய அணித் துணை அமைப்பாளர் வெ.அ.ஜைனுல்லா புதீன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள்.

மும்பை மாநிலத் தி.மு.கழக அவைத்தலைவர் வே.ம.உத்தமன், புறநகர் தி.மு.க. இலக்கிய அணிப் புரவலர் சோ.பா.குமரேசன் டோம்பிவிலி கிளைச் செயலாளர் வீரை.சோ.பாபு இளைஞரணி துணை அமைப்பாளர் அமரன் உத்தமன், தோழர் கண்ணன்,

பிவண்டி கிளைப் பொருளாளர் முஸ்தாக் அலி,

வாஷி கிளைக்கழகம் சார்ந்த தில்லை, ஆறுமுகம், எம்.ஈ.முத்து, டி.சங்கர், குலசேகரன், ஜி.பசுபதிநாதன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். வழக்கறிஞர் க.கணேசன், சங்கர் திராவிட், அ.பாலசுப்பிர மணியன், பூ.சு.அழகுராஜா, குரு, எம்.மலையாண்டி தாஸ், ம.பரமசிவன், அசைலன், ராணி,

அழகம்மாள், வீரம்மா, மாயா, சக்குபாய், காமாட்சி, சந்திரா, பிச்சையம்மா, பார்வதி, சின்னப்பொன்னு, மாதுரி, சந்திரகலா, அமுதா கிருஷ்ணன், ராஜேஸ்வரி, மாரியம்மா, சேக் அலாவுதீன், அஞ்சலை, சீத்தாராமன், திருநாவுக்கரசு, தினேஷ், வேலு, மணி, அறிவு, ராணி, அரவிந்த், ராதாகிருஷ்ணன், ஆனந்தன், சேகர், பட்டு, மீரா, ரேகா, சுரேந்தர், மணி, சைமன், பாக்யலட்சுமி, மாரியம்மா, செல்வக்குமார், அஞ்சனா, கமல், ராமு, விஜயா, நாகு, கமீலா ஆகியோர் நிகழ்வில் பங்கேற்று மகிழ்ந்தனர்.

நிறைவாக, செம்பூர் கிளைச் செயலாளர் நம்பி நன்றியுரை ஆற்றினார்.



திருவள்ளூர் பேருந்து நிலையத்தில் திருவள்ளூர் சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி. இராஜேந்திரன் பொது மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான திருவள்ளூரில் இருந்து திருநெல்வேலி வரை செல்லும் அரசு விரைவு போக்குவரத்து சேவையை கொடியசைத்து துவக்கி வைத்தார். உடன் மாவட்ட அவைத் தலைவர் கே.திராவிடபக்தன், நகர மன்ற முன்னாள் தலைவர் பொன் பாண்டியன், பொதுக்குழு உறுப்பினர் ப.சிட்டிபாபு, துணை மேலாளர் கந்தசாமி, திருவள்ளூர் பணிமனை துணை மேலாளர் புண்ணியமூர்த்தி, மேலாளர் எழில், நகர அவைத் தலைவர் தி.ஆ.கமலக்கண்ணன், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் வி.எஸ்.நேதாஜி, டி.மோதிலால், பி.கே.நாகராஜ், பி.சரவணன், கொப்பூர் திலீப், கைலாசம் உள்பட பலர் உள்ளனர்.


